09.04.2021

**CC No**. 22/2016

அசா. 1 அஸ்வினி

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் அளித்த புகாரினை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்றால் ஆமாம். 7 வருடங்கள் ஆகி விட்டதால் இருவருமே மனமொத்த விவாகரத்து பெற முடிவு செய்திருப்பதால் புகாரினை திரும்ப பெற்று கொள்ள விரும்புகிறேன். எனது பொருட்கள் அனைத்தையும் நான் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டேனா என்றால் என்னுடைய நகைகளை திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டேன். என் பொருட்களை திருப்பித் தருவதாகவும், இருவரின் பெயரில் உள்ள ஜாய்ன்ட்லாக்கரை க்ளோஸ் பண்ணி தருவதாகவும் எதிரிகள் கூறியுள்ளனர். எதிரிகள் எந்த குற்றங்களையும் செய்யவில்லை என்றாலும், அதனால் நான் புகாரினை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்றாலும் நடந்தது உண்மை தான். ஆனால் மேற்கொண்டு நான் வழக்கை நடத்த விரும்பவில்லை. எதிரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரிதான். அதனால் எதிரிகள் மீது நான் கொடுத்த புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றால் சரிதான்.

அரசு தரப்பு மறு விசாரணை

நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதால் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்று தற்போது கூறுகிறேன் என்றால் சரியல்ல.